மாவட்ட கொள்ளை நோய் தடுப்புக்குழு தலைவர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: டாக்டர். டி.ஜி. வினய் இ.ஆ.ப.,

ந.க.எண்: 11945/2020/தே6 நாள் : .03.2020

பொருள் : கொள்ளை நோய் தடுப்பு — மதுரை மாவட்டம்- கோவிட் -19 கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்- கொரோனா நோய் தொற்று தடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்து குழுவினர்களுக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் - சுகாதாரத்துறை துணை இயக்குநரிடம் பெற்று அனைத்து குழு அலுவலர்களுக்கு பகிர்ந்தளித்தல் - மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளித்தல் - துணை ஆட்சியர் நிலையில் குழு அமைத்து ஆணை வழங்குதல்.

பார்வை :
1. தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்களின் கடிதம் எண் 1/2020 நாள் 15.03.2020
2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை(ப்பி1) துறை அரசாணை எண் (நிலை) எண் 347 நாள் 16.03.2020.
3. தொடர்புடைய இதர ஆவணங்கள்.

ஆணைகள் :

மதுரை மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று தொடர்பாக 24 மணி நேரம் செயல்படும் கட்டுப்பாட்டு அறை District Emergency Center / கொரோனா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் காவல்துறை அலுவலர்களை கொண்டு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் மதுரை மாவட்டம் முழுவதும் களப்பணி செய்து வருகின்றனர். இவர்களுக்கு மருத்துவ உபகரணங்கள் துணை இயக்குநர் (சுகாதாரம்) இருந்து பெற்று தேவையானவர்களுக்கு பதிவேட்டில் பதிவு செய்து வழங்குவதற்காகவும், அது தொடர்பான பதிவேடுகளை பராமரிப்பதற்கும் பின்வரும் அலுவலர்கள் கொண்ட குழுவினை அமைத்து ஆணையிடப்படுகிறது.

| பெயர் மற்றும் பதவி | செல்லிடைப் பேசி எண் |
|---|---|
| திரு ரவி,<br>துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) மதுரை. | 94433 98639 |
| திரு. இரா. திருமலை,<br>தனிவட்டாட்சியர் (மாவட்ட ஆய்வுக்குழு),<br>மதுரை. | 98426 66231 |

2) மேற்படி அலுவலர்கள் கொரோனா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் காவல்துறை அலுவலர்களுக்கு அவர்களுக்கு தேவைப்படும் மருத்துவ உபகரணங்களை துணை இயக்குநர் (சுகாதாரம்) இடமிருந்து பெற்று பணியாளர்களுக்கு வழங்க அறிவுறுத்தப்படுகிறார்கள். இப்பணிக்கு தங்கள் அலுவலக உதவியாளர்கள்/ தட்டச்சர்கள் ஆகியோரை பணியில் அமர்த்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறைக்கு அருகாமையில் உள்ள ஆய்வுக்கூட்ட அரங்கில் உள்ள அறையில் இருந்து கொண்டு அது தொடர்பான பதிவேடுகளை பராமரித்து தினசரி மாலை மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து அறிக்கை சமர்பிக்கவும் இக்குழுவினர் ஆணையிடப்படுகிறார்கள்.

மாவட்ட கொள்ளை நோய் தடுப்புக்குழு தலைவர்
மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர்,
மதுரை.

பெறுநர்,

சம்மந்தப்பட்ட நபர்கள்.